Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, DECEMBER 04, 2023

திங்கட்கிழமை டிசெம்பர் 04, 2023 | ஒளி: 09 கதிர் 141 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

காலநிலை மாற்றத்திற்கு எதிராக வருடாந்தம் செலவை

# "மீதப்படுத்த முடியும்"

**புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும் இலக்கை அடைவதற்கான நிச்சயமற்ற தன்மைகள் குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தினார்**

**வெப்ப வலய காலநிலை அபிலாஷைகளுக்கான திட்டத்தை ஆராய்ந்து அறிக்கையிட ஒரு நிபுணர் குழுவை நியமிக்கவும் ஜனாதிபதி முன்மொழிந்தார்**

வெப்பவலய காலநிலை அபிலாஷைகள் திட்டம், காடுகள், சதுப்பு நிலங்கள் போன்ற அத்தியாவசிய இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட முதலீடுகளை ஈர்ப்பதே வெப்பவலய காலநிலை அபிலாஷைகள் திட்டத்தின் நோக்கமாகும் என தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உலக வெப்பமயமாதலை எதிர்ப்பதற்கு இந்த முதலீடுகள் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

இதன் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிராக வருடாந்தம் செலவிடப்படும் டிரில்லியன் கணக்கான டொலர்களை மீதப்படுத்த முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி, இதற்காக தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

உலக வெப்பமயமாதலின் சவாலை எதிர்கொள்ளுதல் மற்றும் வெப்ப வலய நாடுகளுக்கு நிலைபேறான அபிவிருத்தியை உறுதிசெய்வதை இலக்காகக் கொண்ட எதிர்காலத் திட்டமான "வெப்ப வலயக் காலநிலை அபிலாஷைகள்

தொடர்ச்சி P2



## மாடு மேய்க்க சென்றவர் முதலை கடித்து மரணம்

ஹஸ்பர்

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலம்போட்டாறு ஊத்தவாய்க்கால் ஆற்றின் கரையோரத்தில் மாடு மேய்க்க சென்ற ஒருவர், முதலை கடிக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2





முத்துராஜவெலயில்

## 2ஆவது இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையம்

இலங்கையின் இரண்டாவது இயற்கை எரிவாயு மின் நிலையம் முத்துராஜவெலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதன் கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டு தொடங்கி 2026இல் நிர்மாணப் பணிகள் நிறைவடையும். இதன் மூலம் 350 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்படும்.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதி ரணில் பில்கேட்ஸ் சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைவரும் பிரபல வர்த்தகருமான பில்கேட்ஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு டுபாயில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது. துபாயில் உள்ள எக்ஸ்போ சிட்டியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டின் (COP 28) போதே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

## செட்டிக்குளம் இரட்டை படுகொலை: ஒருவர் கைது

வவுனியா-செட்டிகுளம் பகுதியில் வர்த்தக தம்பதியை படுகொலைச் செய்து பத்தாயிரம் ரூபாய் பணம் மற்றும் தங்கத்தை கொள்ளையடித்த 19 வயது இளைஞனை, கிளிநொச்சி உருத்திரபுரத்தில் வைத்து கைது செய்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வியாபார நிலையத்துடன் இணைந்ததாக உள்ள தங்குமிடத்தில் வைத்து வர்த்தகர் மற்றும் அவரது மனைவியை கூரிய ஆயுதங்களால் கடந்த 30ஆம் திகதி இரவு, சந்தேகநபர், வெட்டி படுகொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

யாழ்.-கிளிநொச்சி

## யுவதிகள் இருவர் கைது

போலி விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கைப் பெண்கள் இருவர், கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய பெண். மற்றைய யுவதி யாழ்ப்பாணம் வெல்வெட்டித்துறையைச் சேர்ந்த 26 வயதுடையவர்.

தொடர்ச்சி P2

சிறுவர் நன்னடத்தை பாடசாலை:

## சிறுவன் அடித்துக் கொலை; பெண் மேற்பார்வையாளர் கைது

பாறுக் ஷிஹான், எஸ். சரவணன்



சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த-நிலையில் உயிரிழந்த 14 வயதான சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை கல்முனை தலைமையக பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். மணி ஒன்றைக் களவு எடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொக்குவில் பொலிஸாரால் சிறுவன் கடந்த மாதம் 17ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## 5 நாட்களில் ரூ.11 இலட்சத்துக்கு சாப்பிட்டு மகிழ்ந்த தளபதிகள்

2022ஆம் ஆண்டில் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரிக்கு வந்த இராணுவத் தளபதிகள் குழு, சாப்பிட்டு மகிழ்வதற்காக, ஐந்து நாட்களுக்கு கிட்டத்தட்ட பதினொரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவிடப்பட்டது என தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மன்னாரை சேர்ந்த எழுவர் தனுஷ்கோடியில் தஞ்சம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் - சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேர், தனுஷ்கோடி அடுத்துள்ள மூன்றாம் மணல் திட்டில் படகு மூலம் சென்று வெள்ளிக்கிழமை (1) இறங்கியுள்ளனர்.

படகு கட்டணமாக இரண்டு குடும்பங்களும் சேர்ந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தகவல் அறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிஸார், அவர்களை ட்டு முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைத்தனர்.

தொடர்ச்சி P2

தடைச்செய்யப்பட்ட மூவருக்கும்

## "வாக்கெடுப்பில் பங்கேற்க அனுமதி"

பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டிருந்தாலும், டயானா கமகே உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் வரவு- செலவுத் திட்ட குழுநிலை விவாதம் மீதான வாக்கெடுப்பில் பங்குபற்ற முடியும் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தண்டப்பணம் செலுத்த 24 மணி நேரமும் சேவை

**13 தபால் நிலையங்கள் திறந்திருக்கும்**

போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பில் பொலிஸாரினால் வழங்கப்படும் தண்டப்பணம் செலுத்துவதற்காக மேல் மாகாணத்திலுள்ள 13 தபால் நிலையங்கள் 24 மணிநேரமும் திறந்து வைக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு

## இந்திய குடியுரிமை

**மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு**

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பியவர்களை இந்தியா- இலங்கை ஒப்பந்தம் அடிப்படையில் இந்திய குடிமகன்களாக அங்கீகரிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர் இரும்பூதிப்பட்டி அகதிகள் முகாமை சேர்ந்த டி.கணேசன். இவர் உயர் நீதிமன்ற கிளையில் தனக்கும், தன் குடும்பத்தினருக்கும் இந்திய குடியுரிமை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்க மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2





## பிரபல வர்த்தகரின் வீட்டில் 1 கோடி ரூபாய் கொள்ளை

**பணயக்கைதிகளாக பிடித்து வைத்து ஆயுத முனையில் கைவரிசை**

ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி - நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவக்காடு, கொலனி பிரதேசத்தில் உள்ள மரக்கறி விற்பனையில் ஈடுபடும் பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் ஆயுத முனையில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "மீதப்படுத்த முடியும்"

தொடர்பான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க COP28 மாநாட்டில் சனிக்கிழமை (02) முன்வைத்தார்.

காலநிலை நிதியங்களில் மாதிரி அடிப்படையிலான மாற்றம் மற்றும் பயனுள்ள பிரதிபலன்களை அடைவதற்குப் பலதரப்பு அணுகுமுறையின் தேவை ஆகியவை இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு வழிவகுத்தன என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

2030ஆம் ஆண்டுக்குள் புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தும் இலக்கை அடைவதற்கான நிச்சயமற்ற தன்மைகள் குறித்து கவனம் செலுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது உரையை ஆரம்பித்தார்.

இந்த தீர்மானமிக்க இலக்கை அடைவதற்கான 50% வாய்ப்பு இருப்பதாக வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்காக ஏனைய நாடுகளிடம் இருந்து நிதி உதவி கிடைப்பதை எதிர்பார்க்க முடியாது என்றார்.

எனவே, இந்த நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் வெப்ப வலய மற்றும் வெப்ப வலயமற்ற நாடுகளுக்கும் அரச மற்றும் தனியார்த் துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

வெப்ப வலய காலநிலை அபிலாஷைகள் திட்டம், காடுகள், சதுப்புநிலங்கள் போன்ற அத்தியாவசிய இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட முதலீடுகளை ஈர்ப்பதே வெப்ப வலய காலநிலை அபிலாஷைகள் திட்டத்தின் நோக்கமாகும் என்றும், உலக வெப்பமயமாதலை எதிர்ப்பதற்கு இந்த முதலீடுகள் அவசியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதன் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிராக வருடாந்தம் செலவிடப்படும் டிரில்லியன் கணக்கான டொலர்களை மீதப்படுத்த முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி, இதற்காக தனியார்த் துறையின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நிலைபேறான இந்து சமுத்திரத்தை உருவாக்குவதற்கும் இந்து சமுத்திர ரிம் சங்கத்துடன் (Indian Ocean Rim Association) இணைந்து பணியாற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வெப்ப வலய காலநிலை அபிலாஷைகள் திட்டம் மற்றும் நிலைபேறான இந்து சமுத்திரத்திற்கான முயற்சிகள் உலகின் மிகப்பெரிய கார்பன் உறிஞ்சுதலை உருவாக்கும் என்றும் குறிப்பிட்டார்.

மாலைதீவு, கென்யா, பிரேசில் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகள் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் உள்ளிட்ட உலகத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போது, இந்த வேலைத்திட்டத்தில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டியதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.

வெப்ப வலய காலநிலை அபிலாஷைகளுக்கான திட்டத்தை ஆராய்ந்து அறிக்கையிட ஒரு நிபுணர் குழுவை நியமிக்கவும் ஜனாதிபதி முன்மொழிந்தார், மேலும், அக்குழுவின் ஆய்வுகளை பிரேசிலில் COP30இல் முன்வைக்கவும் பரிந்துரைத்தார்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்திற்கான (ICCU) திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது முன்வைத்தார். காலநிலை மாற்றத்தைத் தணிக்கும் திறனைக் கட்டியெழுப்புதல் மற்றும் மையப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிக்கான இடத்தை உருவாக்குதலே இந்தப் பல்கலைக்கழகத்தின் நோக்கமாகும்.

காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்குத் தேவையான நிதியை சேகரிப்பதற்காக பாரம்பரிய சிந்தனைகளிலிருந்து விடுபட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான வழிகாட்டலை இந்த சர்வதேச பல்கலைக்கழகம் வழங்கும் எனவும் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் மெல்கம் டர்ன்புல் இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவும் இலங்கையின் திட்டத்தைப் பாராட்டிய மெல்கம் டர்ன்புல், இந்து சமுத்திரப் பிராந்தியத்தைப் பாதுகாப்பது அந்த நாடுகள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும் என்றும் தெரிவித்தார்.

# யாழ்.-கிளிநொச்சி
# யுவதிகள் இருவர் கைது

விமானப் போக்குவரத்து அனுமதிக்காக அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் சந்தேகம் அடைந்த கட்டார் ஏர்வேஸ் அதிகாரிகள், இருவரையும் விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விசாரணையில், இந்த இத்தாலி விசாக்கள் பொய்யான தகவல்களைக் கொண்டு போலியாக தயாரிக்கப்பட்டதாக தெரியவந்தது. இதனையடுத்தே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மாடு மேய்க்க சென்றவர் முதலை கடித்து மரணம்

இவ்வாறு முதலையின் தாக்குதலுக்கு உள்ளானவர் சிப்பித்திடல் தம்பலகாமத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 36 வயதுடைய கே.சசிகுமார் என்பவரே இலக்காகியுள்ளார்.

மாடு மேய்க்க சென்ற இருவரில் ஒருவரே இவ்வாறு ஆற்றில் காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் பொது மக்கள் தேடுதல் முயற்சியில் ஈடுபட்டு சடலத்தை மீட்டுள்ளனர்.

அவரது சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# 5 நாட்களில் ரூ.11 இலட்சத்துக்கு சாப்பிட்டு மகிழ்ந்த தளபதிகள்

பொருளாதார நெருக்கடி காரணமாக செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்காக திறைசேரி விடுத்துள்ள சுற்றறிக்கைக்கு முரணாக இந்த தொகை செலவிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையின் படி, மேற்படி பணியாளர் கல்லூரியின் விவகாரங்களை ஆய்வு செய்ய வந்த பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு அதிகாரி மற்றும் முப்படை தளபதிகளுக்கே இவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கல்லூரிக்கு 2019 முதல் 2022 வரை 13 கோடி ரூபாய்க்கு மேல் செலவில் கட்டப்பட்ட நான்கு அடுக்கு நூலகம் மற்றும் தேர்வுக் கூட கட்டிடத்தில் தண்ணீர் கசிவு பிரச்சினையை சரி செய்ய முடியவில்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# செட்டிக்குளம் இரட்டை படுகொலை: ஒருவர் கைது

வவுனியா செட்டிகுளத்தை சேர்ந்த பசுபதி வர்ணகுலசிங்கம் (வயது 70) என்பவரும் அவரது மனைவி வர்ணகுலசிங்கம் நாகலஷ்மி (வயது 68) என்பவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வர்த்தகர் தன்னுடைய வர்த்தக நிலையத்தை மூடுவதற்கு தயாராகிக்கொண்டிருந்த போது, அந்த வர்த்தக நிலையத்துக்கு இரகசியமாக நுழைந்த அவ்விளைஞன், அங்கு மறைந்து இருந்துள்ளார். வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு சென்றதன் பின்னர், வர்த்தக நிலையத்தை நோட்டமிட்டு, பண பெட்டகத்துக்கு அருகில் சென்றுள்ளார்.

எனினும், வர்த்தக நிலையத்துக்குள் யாரே நடமாடுவதை உணர்ந்த, வர்த்தகரின் தந்தை சத்தம் போட்டுள்ளார். அதன்பின்னரே, இவ்விருவரையும் படுகொலைச் செய்துவிட்டு, அவ்விளைஞன் தப்பிச்சென்றுள்ளார் என விசாரணைகளின் ஊடாக அறியமுடிகின்றது.

# "வாக்கெடுப்பில் பங்கேற்க அனுமதி"

சபாநாயகரின் அனுமதியுடன் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மாத்திரம் அந்த மூவரும் பாராளுமன்றத்திற்கு வருகை தர முடியும் என அஜித் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவருக்கு இடையில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தப் பாராளுமன்றம் வெள்ளிக்கிழமை (01) அனுமதி வழங்கியது.

குறித்த தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் அன்று மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின் போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

அந்த மூவருக்கும் ஒரு மாத காலத்திற்குப் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கத் தடை விதிப்பதற்குப் பாராளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழு பரிந்துரைத்திருந்தது.

குறித்த தீர்மானத்திற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக, சபை முதல்வரும் அமைச்சருமான கலாநிதி சுசில் பிரேமஜயந்த, அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இதன்போது, குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளே நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

டயானா கமகேவிற்கு மூன்று மாத கால பாராளுமன்ற தடையும், ஏனைய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தலா இரண்டு வார கால பாராளுமன்ற தடையும் விதிக்கப்பட வேண்டுமெனச் சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட குழு பரிந்துரைத்திருந்தது.

இதனையடுத்து, ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

இதன்போது, ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வாக்கெடுப்பைக் கோரிய நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறினர். வாக்கெடுப்பின் போது பாராளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவாக 57 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் குறித்த தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தார். மேலும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

# மன்னாரை சேர்ந்த எழுவர் தனுஷ்கோடியில் தஞ்சம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தாங்கள் இரண்டு குடும்பங்களும் படகு மூலம் தனுஷ்கோடிக்கு வருகை தந்ததாக தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இது வரையிலும் இலங்கை தமிழர்கள் 295 பேர் அகதிகளாக தனுஷ்கோடி சென்று மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய குடியுரிமை

இந்நிலையில், மனுதாரரர் இந்திய குடியுரிமைக்காக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள், மனுதாரரர் இந்திய குடிமகன் என்பதை நிரூபிக்க போதுமானதாக இல்லை என மத்திய உள்துறை செயலாளர் 11.02.2022இல் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை இரத்து செய்து தன்னையும், தனது குடும்பத்தினரையும் இந்திய குடிமகன்களாக அங்கீகரிக்கக்கோரி கணேசன் உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இதனை விசாரித்து நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு,

இலங்கையில் சிங்களவர்கள் பெரும்பான்மையினர். தமிழர்கள் சிறுபான்மையினர். அங்குத் தமிழர்கள் ஒரே குழுவினராக இல்லை. தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டனர்.

அவர்கள் இலங்கையில் வடக்கு, கிழக்குப் பகுதியில் உள்ளனர். இலங்கையில் வாழும் தமிழர்களின் குறிப்பிட்ட சதவீதம் பேர் இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக தமிழகத்திலிருந்து 19ஆவது நூற்றாண்டில் சென்றவர்கள்.

இவர்கள் இலங்கை எப்போது சுதந்திரம் பெற்றதோ, அப்போதிலிருந்து நாடற்றவர்களாக மாறிவிட்டனர்.

இலங்கையில் வாழும் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்களின் நலன் தொடர்பாக இந்தியா, இலங்கை இடையே 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது. 1964-ல் போடப்பட்ட முதல் ஒப்பந்தத்தில், இலங்கையிலிருந்து 5.25 இலட்சம் தமிழர்களை இந்தியாவுக்குத் திரும்ப அனுப்பி, அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும் என்றும், 1974-ல் ஏற்பட்ட மற்றொரு ஒப்பந்தத்தில் 1.50 லட்சம் பேரில் 50 சதவீதம் பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்குவது, 75 ஆயிரம் பேரை இந்தியாவுக்குத் திரும்ப அனுப்பி, இந்தியக் குடியுரிமை வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

மனுதாரர் 16 வயதில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்துள்ளார். அவருக்கு 1982இல் தான் கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரரின் சிறுவயது புகைப்படம் ஒட்டப்பட்டுள்ளது.

அந்த புகைப்படம் மற்றும் விபரங்களைக் கடவுச்சீட்டு அதிகாரி சான்றொப்பம் அளித்துள்ளார்.

# சிறுவன் அடித்துக் கொலை...

நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் நீதிவானின் உத்தரவின் பிரகாரம் குறித்த காப்பகத்தில் அச்சிறுவன் பாதுகாப்பிற்காக தங்க வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மரணம் அடைந்தவர் மட்டக்களப்பு- கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஆனந்ததீபன் தர்சான்ந் எனும் 14 வயது மதிக்கத்தக்க சிறுவன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சிறுவன் புதன்கிழமை (29) அதிகாலை உயிரிழந்து உள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டதாகவும் சிறுவனின் உடலில் காயத் தழும்புகள் இருப்பதனால் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலையில் வைக்கப்பட்ட சிறுவனின் சடலம் அம்பாறை பொது வைத்தியசாலைக்குப் பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அங்கு சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம் குறித்த மரணம் அடி காயங்கள் காணப்படுவதாகவும் உட்காயங்களினால் மரணம் சம்பவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சிறுவனை தாக்கியதாகச் சந்தேகத்தின் பெயரில் 25 வயது மதிக்கத்தக்க அப்பாடசாலையில் கடமையாற்றும் மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டார். இவ்வாறு கைதான சந்தேக நபர் சனிக்கிழமை (2) கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இந்நிலையில், குறித்த சிறுவன் தங்க வைக்கப்பட்டிருந்த காப்பகத்தில் சம்பவ தினமான இரவு உணவினை உட்கொண்ட பின்னர் பாடசாலை வளாகத்தில் நின்றதாகவும் பின்னர் என்ன நடந்தது என தெரியவில்லை என முன்னுக்கு பின்னான வாக்குமூலங்கள் வழங்கியதைத் தொடர்ந்தே சந்தேகத்தின் பேரில் பாடசாலை மேற்பார்வையாளரான அப்பெண் பொலிஸ் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் சனிக்கிழமை (02) இரவு கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தனது மகனின் மரணத்தில் பலவிதமான பொய் குற்றச்சாட்டுகளையும் பாடசாலையின் நிர்வாகம் முன் வைப்பதாகவும் மிகவும் வறுமை கோட்டின் கீழ் வாழும் நாங்கள் எமது பிள்ளைக்கு நடந்த இதேபோன்ற சம்பவங்கள் யாருக்கும் இடம் பெறக் கூடாது என்றும் பிள்ளையின் மரணத்தில் ஒரு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் மரணம் அடைந்தவரின் தந்தை தெரிவித்திருந்தார்.

உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை ஒரு நாள் விளக்கமறியலில்(இன்று (04) வரை) வைக்குமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எல். நதீர் உத்தரவிட்டுள்ளார்.

# தண்டப்பணம் செலுத்த 24 மணி நேரமும் சேவை

மக்களின் வசதிக்காகத் தபால் திணைக்களமும் பொலிஸாரும் இணைந்து இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார்.

பொரளை, வெள்ளவத்தை, ஹெவ்லொக் டவுன், தெஹிவளை, மொரட்டுவை, பாணந்துறை, களுத்துறை, கொட்டாஞ்சேனை, கொம்பஞ்சவீதிய, பத்தரமுல்ல, கல்கிஸ்ஸை, நுகேகொட, சீத்தவாக்கபுர ஆகிய இடங்களில் உள்ள அலுவலகங்கள் 24 மணி நேரமும் இயங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரினால் வழங்கப்படும் தண்டப்பணத்தை எவ்வித அசௌகரியமும் இன்றி இக்காலப்பகுதியில் மேற்படி தபால் நிலையங்களில் செலுத்த முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# 2ஆவது இயற்கை...

இதன் கட்டுமானச் செலவு 750 மில்லியன் ரூபாயாகும். இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முத்துராஜவெல பிரதேசத்தில் 10 ஏக்கர் காணி இந்த மின் நிலையத்தை அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. இந்தக் காணியை வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபன வளாகத்தில் வெள்ளிக்கிழமை (01) இடம்பெற்றது.

# பிரபல வர்த்தகரின் வீட்டில் 1 கோடி ரூபாய் கொள்ளை

நாவக்காடு - கொலனி பகுதியில் உள்ள குறித்த வர்த்தகரின் வீட்டிற்கு சனிக்கிழமை (2) அதிகாலை 2 மணியளவில் கைத்துப்பாக்கிகள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இந்த ஆயுததாரிகள் முதலில் அங்கிருந்த தொழிலதிபரையும், அவரது மனைவி உட்பட குடும்பத்தினரை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர் எனக் கூறப்படுகிறது.

குறித்த வர்த்தகரின் மனைவி மற்றும் பிள்ளைகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த ஆயுதக் குழுவினர், அவர்களை கொலை செய்யப் போவதாக மிரட்டியதுடன், வீட்டில் இருந்த பாதுகாப்பு பெட்டகத்தை வலுக்கட்டாயமாக திறந்துள்ளனர் என பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

**" வர்த்தகரின் மனைவி, பிள்ளைகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த ஆயுதக் குழுவினர், அவர்களை கொலை செய்யப் போவதாக மிரட்டினர்**

இதனையடுத்து, வீட்டின் பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த சுமார் 70 பவுன் தங்க நகைகள் மற்றும் 30 இலட்சம் ரூபாய் பணம் என்பனவற்றை கொள்ளையடித்த ஆயுததாரிகள், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை மற்றும் கற்பிட்டி பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# “அப்பாவிகளை தண்டிக்காதே”

## நாகராசா அலெக்ஸிற்கு நீதி கோரி போராட்டம்

**நிதர்ஷன் வினோத்**

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த நாகராசா அலெக்ஸிற்கு நீதி கேட்டு வட்டுக்கோட்டையில் கண்டனப் போராட்டமொன்று ஞாயிற்றுக்கிழமை (03) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் வீதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு, வீதித் தடைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

வட்டுக்கோட்டைச் சந்தியில் உயிரிழந்த இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தி போராட்டம் பிற்பகல் 3 மணியளவில்



ஆரம்பமானது. இந்தப் போராட்டம், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

நாகராசா அலெக்ஸின் மரணத்துக்கு நீதி கோரியும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டு வரும் சட்ட விரோத சித்திரவதைகளை நிறுத்தக்



கோரியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள், “வேலியே பயிரை மேற்கின்றதா?”, “அப்பாவிகளை தண்டிக்காதே, குற்றவாளிகளை தப்பவிடாதே”, “எமது மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்” ,உள்ளிட்ட வாசகங்கள் அடங்கி பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

# ஜாபீர் பிணையில் விடுதலை

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**

காத்தான்குடி காதி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புதிய காத்தான்குடி விவாகப்பதிவாளர் யு.எல்.எம்.ஜாபீர், ஒரு இலட்சம் ரூபாய் சரீரப்பிணையில் வெள்ளிக்கிழமை (01) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ரகீப் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் பதிவாளர் ஜாபீர் சார்பில் ஆஜராகிப் பிணை மனு விண்ணப்பமொன்றை செய்த நிலையில், இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பதிவாளர் ஜாபீர் தொடர்பான விடயங்களைச் சட்டத்தரணி




ரகீப் முன் வைத்துள்ளார். இதனையடுத்து, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பதிவாளர் ஜாபீரை ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# வடிவேல் எம்.பி விஜயம்

மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட தோட்டங்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அதன்படி, அலகொல்ல, லகிலேண்ட், கம்பாஹா, கேகீல்ஸ் மற்றும் ஹப்புத்தளை, தங்கமலை, கெல்பன், பத்கொட உள்ளிட்ட தோட்டங்களுக்கு விஜயம் செய்த வடிவேல் சுரேஷ், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்களைக் கையளித்துள்ளதோடு, அங்குள்ள நிறை குறைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

மேலும், தற்காலிக குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு ஜனாதிபதியுடன்



கலந்துரையாடி நிரந்தர குடியிருப்புகளை அமைத்துத் தர விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளதோடு, பாதிக்கப்பட்டுள்ள பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# நீரில் மூழ்கி சிறுமி உயிரிழப்பு

**எப்.முபாரக்**

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பத்தாம் கொலனி பகுதியில் வெள்ளிக்கிழமை (01) சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

முகம்மது ரியாஸ் அமல் ஹாஜிரா என்ற நான்கரை வயதுடைய சிறுமியே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது, வீட்டுக்கு முன்னாள் உள்ள வாய்க்காலில் தவறி விழுந்துள்ளார். அவரை கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

மூச்சுத் திணறியதால் இந்த மரணம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# நன்னீர் மீன் உற்பத்தி நிலையத்திற்கு விஜயம்

**யது பாஸ்கரன்**

கிளிநொச்சி - புதுமுறிப்பு நன்னீர் மீன் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பமாகிய நிலையில், அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஞாயிற்றுக்கிழமை (03) விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

குறித்த விஜயத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டப் பணிப்பாளர் மற்றும் நெக்டா வடமாகாண பணிப்பாளர், பொறியியலாளர் ஆகியோர் வருகை தந்துள்ளனர்.

இதன்போது, மீன் உற்பத்தி நிலையத்தின் வளர்ச்சியை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை உயிரிழப்பு

**எப்.முபாரக்**

கந்தளாய் - சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒன்பதாம் கட்டைப் பகுதியில் மின்சாரம் தாக்கி காட்டு யானை உயிரிழந்துள்ள சம்பவம் சனிக்கிழமை (02) பதிவாகியுள்ளது.

குறித்த காட்டுப் பகுதியில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக மின்சார கம்பிகள் பயன் படுத்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், சூரியபுர பகுதியில் குப்பை மேடு அமைந்துள்ளதால் யானைகளில் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.



மேலும், காட்டு யானை இறந்துள்ள பகுதியில் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகன விபத்தில் இளைஞன் பலி

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி - நாவற்காடு பகுதியில் சனிக்கிழமை (02) இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் சியான்



என்ற 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விற்பனை நிறுவன வாகனமொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர், யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

# தோணா கால்வாயில் துப்புரவு பணி முன்னெடுப்பு

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**

புதிய காத்தான்குடி தோணா கால்வாயை துப்புரவு செய்யும் பணி காத்தான்குடி நகர சபை சுகாதாரத்துறை ஊழியர்களினால் வியாழக்கிழமை (30) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில், வெள்ள அபாயத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையிலேயே இந்த துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



தோணா கால்வாயை துப்பரவு செய்யும் பணியை காத்தான்குடி நகர சபையின் செயலாளர் ரிப்கா ஷபீன் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

களஅதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தில்

# மாணிக்கக்கல் அகழ்ந்த நால்வர் கைது

**செ.தி.பெருமாள்**



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போற்றி தோட்டத்திலுள்ள கள அதிகாரியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இரத்தினக்கல் தோண்டிக்கொண்டிருந்த கள அதிகாரி உட்பட நான்கு சந்தேக நபர்களை மஸ்கெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பொலிஸ் அதிகாரிகள் இணைந்து கைது செய்துள்ளனர்.

தோட்டத்திலிருந்து காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீரேந்திச் செல்லும் கால்வாய்க்கு அருகில் கள அலுவலரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ளதுடன், அந்த உத்தியோகபூர்வ இல்லத்தின் படுக்கையறையில் 30 அடி ஆழமான பள்ளம் தோண்டப்பட்டு குழியில் இருந்த வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லத்தினுள் நீண்ட நாட்களாக மண் அள்ளப்பட்டு இருப்பதாக சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் பலாங்கொடை, பொகவந்தலாவ மற்றும் நோர்வூட் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தொழிலாளர்கள் தேவை**

தையல் கலைஞர் (ஆண்-பெண்)
உதவியாளர் (பெண்)
ஷோ ரூம் பராமரிப்பாளர் (பெண்)
இலக்கம் 1 & 3 (1D), சின்சபா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06
தொடர்புகளுக்கு
0777340758
0765637235

WCIC Women's Chamber of Industry and Commerce Engage - Empower - Enrich

WCIC மேன்மைக்கு கௌரவம் Women Entrepreneur Awards 2023 வலுவூட்டல் AIA INSURANCE

இலங்கையின் சாதனைமிக்க மகளிர் தொழில்முனைவோரை அழைக்கின்றோம்



மகளிர் தொழில்முனைவோர் 2023 இல் பங்கேற்க இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!

ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக
மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2023

விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய.
மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர், இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2023 ஆம் ஆண்டின் மிக விரும்பப்படும் பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.

என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை தொடர்புடைய இணைப்புகளுடனும் WCIC க்கு நுழைவுக் கட்டணச் சான்றுடனும் 2023 டிசெம்பர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

அனுசரணையாளர்கள்

பிளட்டினம்: AIA HEALTHIER, LONGER, BETTER LIVES
டயமன்ட்: DFCC Aloka (வங்கிப் பங்காளர்)
கோல்ட்: McLARENS GROUP, MAS CHANGE IS COURAGE
ப்ரோன்ஸ்: Hayleys, asianpaints, IMPRA, SLTMOBITEL, DANKOTUWA, DIMO, NIBM (கல்விப் பங்காளர்)

ஊடக பங்காளர்-அச்சு / சமூக ஊடகம்
Lanka Woman, Sunday Times, DailyMirror, Daily FT, தமிழ்Mirror, Daily FT Online, DailyMirror Online, தமிழ்Mirror Online

இணையும் இலத்திரனியல் பங்காளர்கள்: Hiru TV, Hiru FM, SUN FM, Gold FM, Sooriyan FM

அறிவுசார் பங்காளர்: EY Building a better working world

தொடர்பாடல் பங்காளர்: triad

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தைக்கு அருகாமையில், கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080

# சட்டத்தை அச்சொட்டாக அமுல்படுத்தாது பூசி மெழுகும் பொலிஸார்

பல இனங்கள் வாழும் நாடொன்றில், சட்டம், ஒழுங்கை அமுல்படுத்தும் பொலிஸார், இன, மத, மொழி பேதங்களை மறந்து, நீதி நேர்மையாக அச்சொட்டாகச் செயற்படவேண்டும். இல்லையேல், அந்நாட்டில் வாழ்பவர்கள் மட்டுமன்றி, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும், நாட்டின் சட்டத்தின் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவே இருப்பர்.

தற்போதுள்ள பொலிஸாரில் ஒரு சிலரின் செயற்பாடுகளை பார்க்குமிடத்து, ஒரு துளியேனும் நேர்மையைப் பார்க்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, சர்வதேச உடன்படிக்கையையும் மீறியே செயற்படுகின்றனர்.

அந்தளவுக்கு நிலைமை மோசமாகிக்கொண்டு போகின்றது.

நாட்டில், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) அமுலில் உள்ளது. எனினும், பக்கச்சார்பான முறையிலேயே பொலிஸார் செயற்படுகின்றனர். குறிப்பாக சிறுபான்மை இனங்களை வேண்டுமென்றே குறிவைக்கும் செயற்பாடுகளே வியாபித்து இருக்கின்றன.

பிற மதங்களை நிந்தித்த குற்றச்சாட்டில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கைக்கு அமைவாக, மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது செய்யப்பட்ட பல மணிநேர விசாரணைக்குப் பின்னர், கோட்டை நீதவான் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் டிசெம்பர் 13ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இன, மதங்களை நிந்தித்தல், வெறுப்பு பேச்சைப் பேசியமை இது முதல் தடவையல்ல, சட்டம், ஒழுங்கு சரியாக அமுல்படுத்தப்படும் வரையிலும் இதுவே கடைசி தடவையாகவும் இருக்கமுடியாது என்பது எங்களுடைய அவதானிப்பதாகும். ஏனெனில், இதற்கு முன்னர் மிகப்பகிரங்கமாக வெறுப்பு பேச்சு பேசியவர்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சிங்கள- பௌத்தர்கள் பெரும்பான்மை இனமாக வாழும் நாடு என்பதால், சிங்கள- பௌத்தர்கள் குற்றமிழைக்கும் போது, கைது செய்யக்கூடாது. தண்டிக்கக்கூடாது என்று எந்தவொரு சட்டத்திலும் குறிப்பிடப்படவில்லை. எனினும், அரசியல் அழுத்தங்கள் காரணமாகவே, பலரும் பின்னடிக்கின்றனர் என்பதே எமது அவதானிப்பாகும்.

அவ்வாறு இல்லையென பொலிஸார் மறுப்பார்களாயின், தமிழர்களைத் துண்டு, துண்டாக வெட்டிக் கொல்வேன் என்று பகிரங்கமாக எச்சரித்த பௌத்த தேரர் அம்பிட்டிய சுமணரத்னவுக்கு எதிராக, ஏன்? நடவடிக்கை எடுக்கவில்லை, பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டும், விசாரணைக்காக அழைக்கப்படவில்லை. எனினும், ஜனாதிபதியின் மட்டக்களப்பு விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் எனக் குற்றச்சாட்டி, இருதரப்பினருக்கு எதிராகவும் வழிக்குத் தாக்கல் செய்து, பொலிஸார் பூசி மெழுகிவிட்டுள்ளனர்.

சுமணரத்ன தேரரின் வெறுப்பு பேச்சு தொடர்பில், பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. பொலிஸ் மா அதிபர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரிடமும் முறையிடப்பட்டது. எனினும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நாட்டின் சட்டம், சிறுபான்மையினரை இலக்கு வைத்தே அமல்படுத்தப்படுகின்றது என்பது மேலே குறிப்பிட்ட இவ்விரு சம்பவங்களின் ஊடாகத் தெட்டத்தெளிவாகின்றது என்பதை நினைவில் கொள்க.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

யாவருக்கும் சுய புத்தி உண்டு. வாழ்கையில் புது,புது அனுபவங்களூடாக வருகின்ற பகுத்தறிவை, மிகவும் நுட்பமாகப் பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதே சுய புத்தியாகும்.

எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொடுத்தபடி இருக்க முடியாது. பல விடயங்களை நாங்கள் தேட வேண்டியுள்ளது.

மேலும் தனது முழு முயற்சியுடன் நல்ல முடிவை அறிவதே மகிழ்ச்சிகரமானது. கால மாற்றங்கள் அறிவை, அதன் தேவைகளை எமக்கு உணர்த்தியே தீரும்.

அச்சப்படுவதால் மனிதன் முடிவை எடுக்கத் தயங்குகின்றான். தோல்விகளால் மனிதன் எழுவது எப்படி என உண்மையைத் தனது சுய அனுபவத்தால் அறிந்து கொள்கின்றான்.

உலகில் பல அச்சரியங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. அத்துடன் பேரழிவுகள், யுத்தங்கள், பஞ்சம் என பல இடர்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது. உலகம் முழுவதிலும் எதுவும் நடக்கலாம். இவற்றைக் கடந்து செல்வதே மனித வாழ்க்கை. சக்தி, துணிவுடன் இயங்குக.

நன்றி– பருத்தியூர் பால. வயிரவநாதன்

லக்ஸ்மன்

# வலுக்கும் புலிகளின் மீளுருவாக்க அச்சம்

நாட்டுக்குள் வலுக்கும் புலிகளின் மீளுருவாக்கம் என்ற சிங்களவர்களிடமுள்ள அச்சம் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் நியாயமானதுதான்.
ஆனால் அந்த அச்சத்தை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளைத்தான் அவர்கள் மேற்கொள்வதாக இல்லை. அத்துடன், முயற்சிக்காவிட்டாலும் இருக்கும் நெருக்கடியை வலுவாக்கமலிருக்கக்கூட முயலவுமில்லை. 2023 நவம்பர் 27 மாவீரர் தினத் தடைகளும், தடையுத்தரவுகளும், கைதுகளும் அது தொடர்பான பாதுகாப்புத் தரப்பினரின் நடவடிக்கைகளும் அதற்கான அண்மைய எடுத்துக்காட்டு.

ஆனால், யாரைத் திருப்திப் படுத்துவதற்காக மாவீரர் தினத்துக்கான தடையுத்தரவுகள் பெற்றப்படுகின்றன என்ற சந்தேகத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற பழ.நெடுமாறனின் அறிவிப்பு, பிரபாகரனின் மகள் துவாகா இவ்வருடத்தில் மாவீரர் தினத்தில் உரையாற்றுகிறார் என்ற அறிவிப்பு போன்றன காரணமாக அமைந்திருக்கலாம். துவாரகாவின் வருகை தொடர்பில் தமிழர்களிடம் சந்தேகம் இருக்கிறது. பல்வேறுபட்ட வகையில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த சந்தேகங்களெல்லாம் தமிழர்களுக்கே தவிர சிங்களவர்களுக்கல்ல என்பதே உண்மை.

இவை இரண்டும் மட்டுமே சிங்களவர்களின் அச்சத்துக்கு மேலும் தூபமிட்டிருக்கலாம். அதே போன்று வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் நடைபெற்று வருகின்ற தமிழர்களின் அரசியல் ரீதியான முயற்சிகளும் காரணங்களாக இருக்கின்றன.

இலங்கையின் அடுத்த சுதந்திர தினத்துக்கான ஆயத்த வேலைகள் இப்போதே ஆரம்பித்து விட்டன. கடந்த வருடத்தில் பௌத்த பிக்குகள் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எரித்தார்கள். அவர்களது அந்த எரிப்பானது 13ஐ அல்ல, ஒட்டுமொத்த நாட்டையே எரித்ததாகப் பேசப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த வருடம் நிகழ்த்திய அக்கிராசன உரையில் பொலிஸ் அதிகாரமற்ற, ஒற்றையாட்சிக்குள்ளே அதிகாரப் பரவலாக்கல் என்ற அடிப்படையில், அதிகாரங்களைப் பரவலாக்கி புரையோடிப்போயுள்ள இந்த இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக்காண வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அரகலய போராட்டத்தினையடுத்து, ஜனாதிபதியானவுடன் 2023, சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழர்களது இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அறிவித்தார். அதன் பின்னர் அதிகாரப் பரவலாக்கம் குறித்து கருத்து வெளியிட்டார் ஆனால், இப்போது 2024ஆம் ஆண்டு சுதந்திர தினமும் வந்து விட்டது. இன்னமும் அது நிறைவேறவில்லை.

இலங்கை சுதந்திரம் அடைந்ததோ, என்னவோ தங்களுக்கான சுதந்திரம் இல்லையே என்ற மனோநிலையிலிருக்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இருப்பினும், அவர்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. இதுவே இலங்கையின் தற்போதைய நிலை. இந்திய மக்கள் அகிம்சை ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போரடி ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது. ஆனால், இலங்கையின் சுதந்திரத்துக்காக லண்டன் சென்று பெற்றுக் கொடுத்தவர்கள் தமிழர்கள் என்பது மறக்கப்பட்டு தொடர்ச்சியான அடக்குமுறைகளே நடந்த வண்ணமிருக்கின்றன.

இந்திய சுதந்திரத்தின் பின்னர் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்றவை பிரிந்து போயின. ஆனால், பாகிஸ்தானை விடவும் அதிக முஸ்லிம்கள் இந்தியாவில் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும், வளமாகவும் வாழ்வதுடன், அவர்களுக்கு மதம் உள்ளிட்ட அனைத்து சுதந்திரங்களும் உண்டு. அவ்வாறு முழுச் சுதந்திரத்துடன் தமிழர்கள் வாழ்வதற்கான சூழலை ஏன் இங்கு ஏற்படுத்த முடியாமலிருக்கிறது என்ற கேள்வி ஒரு பகுதி தமிழர்களிடம் இருக்கிறது.

இலங்கைத் தமிழர்கள் 1948 முதல் 30 ஆண்டுகள் அகிம்சை ரீதியாக, 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுத ரீதியாகப் போராடி அப் போராட்டம் அழிக்கப்பட்ட பின்னர் மேலும் அடக்குமுறைகளை எதிர்கொண்டுவருகிறார்கள். 1949இல் பதவிக்கு வந்த இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கில், தமிழ், தமிழ் பேசும் மக்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்குமாக கல்லோயா குடியேற்றத்தை ஆரம்பித்தார்.

அதன் பின் வந்த அரசுகளால், சேருவில, அல்லை - கந்தளாய் வரை குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதன் மூலம், கிழக்கில் 1921இல் 0.5 வீதமாக இருந்த சிங்கள மக்கள் இப்போது 24 வீதமாக மாற்றமடைந்துள்ளனர்.

வடக்கைப் பொறுத்தவரையில் அனுராதபுரம், வவுனியா, வெலிஓயா என குடியேற்றங்கள் முளைத்தன. ஆனால் கிழக்கைப் போல் விகிதாசாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை.

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம். அதன்மூலம் சிறி கொண்டுவரப்பட்டது. 1958, 1978, 1983களில், பாரிய இனக்கலவரங்கள் உருவாக்கப்பட்டன. 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது தமிழர்கள் கடல்வழியாகத் தப்பிச்செல்லவேண்டிய நிலையும் உருவாகியிருந்தது. 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்தே ஆயுதப்போராட்டம் உருக்கொண்டது. வட கிழக்கில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைந்தார்கள். உக்கிரமடைந்த போர் நிலைமையில் 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு மாகாணசபை அதிகாரம் உருவாக்கப்பட்டது. ஆனால், அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் இன்று வரை தயாராக இல்லை. இது அரசாங்கமே அரசியலமைப்பை மீறும் செயலாகும். ஒருவேளை, இலங்கை- இந்திய ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் நாங்கள் தனி ஈழம் பெற்றிருப்போம், தனி நாடு மலர்ந்திருக்கும் அதனை இந்தியா தடுத்துவிட்டது என்ற ஆதங்கம் தமிழர்களுக்காகப் போராடிய விடுதலைப் போராட்ட இயக்கங்களின் மத்தியில் இப்போதும் இருக்கிறது.

இது வரலாறாக இருக்க, இவ்வருடத்தின் மாவீரர் தினக் காலம் தமிழர்களின் மீதான அடக்குமுறையையும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் முழுமையான செயற்பாட்டுடனான தன்மையினையும் நாட்டுக்கும், சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தியிருக்கிறது. சர்வதேச நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புக்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குமாறு கூறிக் கொண்டிருக்கின்ற நிலையில் இக் கைதுகள் நடைபெற்றிருக்கின்றமை முக்கியமானதாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நடைபெற்றிருக்கின்ற கைதுகள் மிகவும் கேலிக்குரியவைகளாகவே அமைந்திருக்கின்றன.

யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் பெற்றோரைக் கௌரவித்தல், அவர்களுக்கு உமஹ்ரீதவிப் பொருள்கள் வழங்குதல், பிறந்தநாளுக்காக கேக் வெட்டுதல், கேக் விற்றல், மாவீரர் தின நிகழ்விற்கான சிவப்பு மஞ்சள் கொடிகள், அலங்கரிப்புப் பொருள்களை வாகனத்தில் எடுத்துச் சென்றமை, ஒலிபெருக்கி வாடகைக்குக் கொடுத்தமை, வாகனம் ஓட்டியமை, பொலிஸாருடன் சத்தமாக வாக்குவாதம் செய்தமை என்றே செல்கின்றன. 2021ஆம் ஆண்டில் மாவீரர் தினம் தொடர்பான விடயங்களை முகப் புத்தகத்தில் பகிர்ந்தமை. பகிர்ந்தவர்கள் மற்றையவரின் விருப்பமின்றி அவரையும் இணைத்தமை, அவர்களின் பகிர்வுக்கு விருப்பம் தெரிவித்தமை போன்ற காரணங்களுக்காகக் கூட கைதுகள் நடைபெற்றிருந்தன.

சிங்களப் பெரும்பான்மை மக்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்பட்டுவிடல்லை. அவ்வாறு மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை என்பது பல தடவைகளில் நிரூபிக்கப்பட்டும் இருக்கின்றன. கடந்த வருடத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுமதித்திருந்தார். ஆனால், இவ்வருடம் முழுமையாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அவர் மௌனத்தைக் கடைப்பிடித்திருக்கிறார். அதற்கு அடுத்த வருடத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களுக்கான அறிவிப்பு காரணமாக இருக்கலாம்.

இவ்வருடம் மாவீரர் தின நிகழ்வுகளுக்கு பொலிஸாரால் கோரப்பட்ட நீதிமன்றத் தடையுத்தரவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டமைக்கு நீதிபதிகளுக்குள்ள அச்சமும் காரணம் என்று பாராளுமன்றத்தில் பேசப்பட்டது. ரணில் விக்ரமசிங்க கடந்த வருடம் போல் இவ்வருடத்திலும் அனுமதிப்பார் என்ற நம்பிக்கையிலிருந்த தமிழ் மக்களின் நம்பிக்கையில் மண் அல்ல பாறையே விழுந்திருக்கிறது. இந்த இடத்தில்தான் சிங்களவர்களைத் திருப்திப்படுத்தும் மனோநிலை ரணிலுக்கும் ஏற்பட்டுவிட்டதோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

அரசியலமைப்பில் காணப்படும் சரத்துக்களை தங்களுடைய ஏதுக்களுக்காக தேடிக் கண்டுபிடிக்கும் பாதுகாப்புத் தரப்பினரும் சிங்களப் பெரும்பான்மையினரும் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு மாத்திரம் தேடாதிருப்பதன் மர்மம்தான் என்ன என்பது தமிழ் மக்களின் கேள்வி.

அடக்குமுறைகளின் வெளிப்பாடாகப் போராட்டங்கள் தோற்றம் பெறுகின்றன. நாட்டில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வருகின்ற அடக்குமுறைகளின் வெளிப்பாடு என்னவாக இருக்கும். அப்போது நாட்டுக்குள் வலுக்கும் புலிகளின் மீளுருவாக்கம் என்ற சிங்களவர்களிடமுள்ள அச்சம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டதாகக் கூட இருக்கலாம் எனலாம்.

## கடிதங்கள்

### மழைநீரால் அவதியுறும் மக்கள்

வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாக மழை பெய்துவ வருகின்றது. இதனால் பல இடங்களில் மழை நீர் வழிந்தோட முடியாமல் தேங்கியுள்ளதனால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள பெரியபோரிவு, பட்டாபுரம், முனைத்தீவு, கோவில்போரதீவு, பழுகாமம், உள்ளிட்ட பல கிராமங்களில் மழைநீர் வழிந்தோட முடியாமல் உள்ளதால், பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.


மழை வெள்ளம் வழிந்தோடுவதற்கு ஏற்ற வடிகான் வசதிகள் இன்மையால்தான் இவ்வாறு நீர் தேங்கியுள்ளதாகவும், இதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கருத்திற் கொண்டு தொற்று நோய்கள் ஏற்படுவதற்கு முன்னரே வடிகான் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தேங்கியுள்ள மழை நீரை வழிந்தோடச் செய்வதற்கு உடன் முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க கிராமங்களில் மழை நீர் தேங்கியுள்ளதனால் மக்களின் வீடுகளுக்குள்ளும் நீர் புகுந்துள்ளது. இந்நிலையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தற்காலிகமாக வீதியின் ஓரமாக நீர் வழிந்தோடுவதற்குரிய வசதியை ஏற்படுத்திக் கொடுத்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

– வ.சக்தி



# தீயால் கருகும் லயன்கள்



செல்வகுமார் ரினோஷன்
ஊடக கற்கைகள் துறை
கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்



'நான், என்னோடய கணவர், என்னோடய கைக்குழந்த, என்னோடய பிள்ளைக, மாமா, மாமி மொத்தம எட்டு பேரு இந்த சின்ன வீட்டுலதா இருக்கோம். மழை வந்தா தகரம் எல்லா பறந்து போயிடும். எங்களுக்கு வீடு கிடைக்கிற வர இந்த நிலைமை தான்' ' என்று போடைஸ் தோட்டத்தை சேர்ந்த பெண் ஒருவர் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) தெரிவிக்கின்றார். யார் இந்தப் பெண்? ஏன் இப்படி தெரிவிக்கின்றார்? என்ற கேள்விக்கு விடையாக, இவர் 2019ஆம் ஆண்டு தனது லயன் குடிலை தீயிற்கு பறிகொடுத்து, இன்று வரை வீடற்று இடர்ப்படும் மலையகப் பெண் ஒருவராவார்.

உண்மையில் இவ்வாறு இவர் மட்டும் பாதிக்கப்படவில்லை. இதுவரை மலையகத்தில் 399 லயன் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. அதிலும் நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் 366 லயன் அறைகள் முற்றாக அழிவடைந்ததோடு பாதிப்படைந்தவர்களில் பலர், இன்றும் தற்காலிக குடில்களிலேயே இருக்கின்றனர்.

இம்மக்கள் 200 வருடங்களுக்கு முன் பிரித்தானியர்கள் பெருந்தோட்டப் பயிர்களை இலங்கையில் பயிரிட்டதால் அதிக வேலையாட்கள் தேவைப்பட்டனர். அவ்வேளை, தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட இந்திய வம்சாவளியினரை லயன் குடிசைகளில் தற்காலிகமாகத் தங்க வைத்தனர். 200 வருடங்கள் கடந்தும் இவர்கள் கிட்டத்தட்ட 150,000 லயன் குடில்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.



இக் குடியிருப்பில் வடிகால் அமைப்பு வசதி, மலசலக்கூடம் வசதி, மின்சார வசதி, நீர் வசதி என்பன சீராகக் கட்டமைக்கப்படாது வாழ்ந்து வருகின்ற போதிலும் அக் குடியிருப்பும் தீக்கிரையாவது கொடுமையே. அப்படி தங்களின் குடியிருப்பை 2023.07.05ஆம் திகதியன்று தீயிற்குப் பறிகொடுத்து தங்களின் உடைமைகளை இழந்த ராகலை மத்திய பிரிவு மக்களின் கருத்துப்படி, 'நாங்கள் தற்போது பழைய கட்டிடம் ஒன்றில் ஒரு மாதங்களாக இருந்தும் குடியிருப்பு தொடர்பான எவ்வித தெரிவிப்புமில்லை' என்கின்றனர். இதனால் 70க்கும் மேற்பட்டோர்கள் வேறு வழியில்லாமல் தற்காலிக குடிசைகளை நோக்கிச் சென்றுள்ளனர்.

இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட நபரொருவர் கூறுகையில், (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) 'தோட்ட நிர்வாகமும் அரசியல்வாதிகளும் எரிந்த லயன்களிலேயே மீண்டும் எங்களை இருக்க சொல்கின்றனர்' என்றார். அப்படியாயின் மீண்டும் இவ்வாறான தீ விபத்து ஏற்படாமல் இருக்குமா? என்பது கேள்விக்குறியே. இப்படியான தீப்பரவல் குறித்து திரட்டப்பட்ட தகவலின் அடிப்படையில், 2018 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் 399 லயன் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதோடு, அதிகப்படியாக நுவரெலியா மாவட்டமே பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், நுவரெலியா மாவட்டத்தில் 16 பொலிஸ் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட தீ விபத்துக்கள் அடிப்படையில் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் 58 லயன்களும், ஹட்டன் பொலிஸ் பிரிவில் 54 லயன்களும், லிந்துலை பொலிஸ் பிரிவில் 55 லயன்களும், தலவாக்கலை பொலிஸ் பிரிவில் 44 லயன்களும் ராகலை பொலிஸ் பிரிவில் 42 லயன்களும் பதிவாகியுள்ளன. அதேபோல, இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பொலிஸ் பிரிவு, பதுளை மாவட்டத்தில் பசறை, ஹப்புத்தளை பொலிஸ் பிரிவும், கண்டி மாவட்டத்தில் புஸ்ஸல்லாவ, கலஹா பொலிஸ் பிரிவுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் மாத்திரம் இதுவரை 70 லயன் குடியிருப்புக்களுக்கு மேல் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளின் தீப்பரவல் குறித்து வெளிப்படையாக காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. மின்கசிவு, வீடுகளின் விளக்குகளில் ஏற்பட்ட தீ என தெரிவிக்கப்பட்டிருந்தாலும், 1990க்கு பிறகே மின்சாரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டன. அப்பொழுது கட்டமைக்கப்பட்ட மின் கட்டமைப்பே சுமார் 30 வருடங்களுக்கு மேலாக பாவனையில் உள்ளது. அத்துடன், 150 வருடங்களுக்கு மேற்பட்ட குடியிருப்பு என்பதால் தீப்பரவல் இலகுவாக ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும், லயன் குடியிருப்பென்பது மிக நெருக்கமாக அமைந்தக் குடியிருப்பு. ஒரு வீட்டில் தீ ஏற்படும்போது, அதனை உடனடியாக அணைப்பதற்கு முன்பாக ஏனைய வீடுகளுக்கும் பரவிவிடும். தீயை அணைப்பதற்கு அந்த மக்களின் நீர் வசதியும் இல்லை, முன் ஏற்பாடுகளும் இல்லை. நகர் பகுதியில் தீப்பரவல் ஏற்பட்டால் உடனடியாக தீயணைப்பு வாகனங்கள் சென்று அணைப்பது போல் இவர்களுக்கு வீதி வசதிகளும் சீராக இல்லை. இப்படி நீர் வசதி, வீதி வசதி இன்றிய இவர்களால் தீப்பரவலை எவ்வாறு தடுக்க முடியும்?

லயன் குடியிருப்பு இன்னும் தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அக்குடியிருப்பைச் சீரமைக்கவும் முடியாதுள்ளது. இதற்கு நல்லதொரு முடிவாக இம்மக்களுக்கான காணியுரிமை, தனி வீட்டுத்திட்டம் போன்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் 2015 - 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னாள் மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வீட்டமைப்பு திட்டங்களும் இந்திய அரசாங்க நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்ட வீட்டமைப்பு திட்டங்களும் கிடப்பில் இருக்கும் நிலையில், இம்மக்களுக்கு எப்போது தனி வீடு கிடைக்கும், எப்போது காணி உரிமை கிடைக்கும் என்பது கேள்விக்குறியாகின்றது.

இது தொடர்பாக மலையக காணி உரிமை இயக்கத்தின் தலைவரான த.கணேசலிங்கம் தெரிவிப்பின்படி, ' தொடர்ச்சியாக இது போன்று பல்வேறு அனர்த்தங்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன. ஒரு வீட்டிற்கு ஏற்படும் அனர்த்தம் முழு லயன்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது. அனைத்து லயன் வாழ் மக்களுக்குமான தனி வீடுகளை அமைப்பதற்குப் பல வருடங்களாகும். இதற்கான தீர்வாகவே அவர்களுக்குக் காணி உரிமையைக் கொடுக்கப்படும் பட்சத்தில் அவர்களுடைய தனி வீட்டை அவர்களாலே அமைத்துக் கொள்ள முடியும். இதன்போது இவ்வாறான அனர்த்த நிலையைக் குறைக்க முடியும்' என்றார்.

இதனையே நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வே.ராதாகிஷ்ணன் குறிப்பிடும்போது, 'நல்லாட்சி அரசாங்கத்தின் போது இந்திய வீடமைப்புத் திட்டம் மூலமாக வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறே 14,000 வீடுகள் அமைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 10,000 வீடுகள் அமைக்கும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தோட்ட நிர்வாகம் காணிகளைத் தருவதில் மிகக் கெடுபிடியாக உள்ளது. அதனால் நாம் முதலில் காணியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதன் பிறகே தனி வீட்டுத் திட்டத்தை அமுல் செய்ய முடியும். எனவே, மலையக மக்களுக்குக் காண உரிமை கொடுக்க வேண்டும். அவர்களை சிறுதோட்ட உடைமையாளர்களாக மாற்ற வேண்டும்' என தெரிவித்தார்.

இப்படியாகப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தாலும் கூட, இம்மக்களின் அவல நிலை மாறவில்லை என்பதே உண்மை. இதற்கான தீர்வு 200 வருடங்கள் கடந்தும் மாறாத போது, இனியும் எத்தனை வருடங்கள் என்பது கேள்விக்குறியாகிறது. இதற்காக மலையக மக்களின் அடுத்த சந்ததியினர் கல்வியின் மூலமாக தங்களின் நிலை மாற்ற வேண்டும் என்பது பலரின் வேண்டுகோள்களாக உள்ளது. இனியும் லயன்கள் முற்றாக அழிந்து எமக்கான தனி வீட்டைக் கொடுப்பார்கள் என்ற எண்ணங்களை விடுத்து, தங்களுடைய வாழ்க்கையினை தாமே தீர்மானிக்க வேண்டுமென மலையக மக்கள் சிந்திக்கும் நிலை உருவாகும் வரை, லயன் வாழ் மக்களின் அவலங்கள் குறையப் போவதில்லை. 200 வருடங்கள் கடந்த எம் சமூகத்தின் சிந்தனை இனியாவது மாறட்டும்.









### ஜப்பானில் பணியாற்றுவதற்கு நிர்மாண களத் திறன் பரீட்சை

# 2023 டிசெம்பர் மாதம் ஆரம்பம்

இலங்கையைச் சேர்ந்த நிர்மாணத்துறைசார் பணியாளர்களுக்கு ஜப்பானில் பணியாற்றுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் 2023 டிசெம்பர் மாதம் இலங்கையில் நிர்மாண களத் திறன் பரீட்சை அறிமுகம் செய்யப்படவுள்ளதாக ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது. இந்தத் திறன் பரீட்சையுடன், தாதியியல் பராமரிப்பு, உணவு சேவை மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் திறன் பரீட்சை கடந்த ஆண்டு முதல் முன்னெடுக்கப்படுவதுடன், இலங்கையில் தற்போது நான்கு திறன் பரீட்சைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

திறமை படைத்த பல இலங்கையர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, ஜப்பானில் பணியாற்றுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் என ஜப்பான் எதிர்பார்ப்பதுடன், ஜப்பானின் நிர்மாணத்துறையில் பணியாற்றும் வாய்ப்பை வழங்குவது மாத்திரமன்றி, இலங்கையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கக்கூடிய அபிவிருத்தி பணிகளுக்கும் பயனளிப்பதாக அமைந்திருக்கும். இலங்கையின் அபிவிருத்திக்கு அவசியமான ஆதரவையும் உதவிகளையும் ஜப்பானிய தூதரகம் தொடர்ந்தும் வழங்கி, இலங்கையுடன் நீண்ட காலமாக பேணி வரும் நட்பை மேலும் கட்டியெழுப்பும்.

இந்த பரீட்சைக்கான பதிவுகள் பற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள Prometric இணையத்தளத்தைப் பார்வையிடவும். இந்த பரீட்சைகளை இந்த அமைப்பு முன்னெடுக்கின்றது. பரீட்சைக்கான பதிவுகள் நவம்பர் 29ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

# வறுமை ஒழிப்பிற்கான உபாய முறைகள் பற்றிய கருத்தரங்கு

வறுமை ஆராய்ச்சி நிலையமானது, "பொருளாதார நெருக்கடி மிகுந்த இக்கால கட்டத்தில் வறுமை ஒழிப்பு" எனும் தலைப்பின் கீழ் ஆய்வுக்கருத்தரங்கை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இதில் துறைசார் நிபுணர்கள், தொழில் விற்பனர்கள் மற்றும் பலதரப்பு ஆர்வலர்கள் பங்கேற்று இலங்கையின் வறுமை தொடர்பான மிகமுக்கிய பலதரப்பட்ட விடயங்களை ஆராய்ந்திருந்தனர்.

1990ஆம் ஆண்டுகளில் இருந்து வறுமைக் குறைப்பு தொடர்பாக இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டிருந்தது. 1990களில் 26.1% ஆக இருந்த வறுமை நிலையானது, 2016க்குள் சுமார் 4% ஆகக் குறைந்தது என கூறலாம். என்றபோதிலும், COVID-19 பரவலைத் தொடர்ந்து எமது பொருளாதாரம் பாரிய வீழ்ச்சிக்கு முகம் கொடுத்தது. இதன் விளைவாக எமது நாட்டின் வறுமை நிலை 26% ஆக அதிகரித்தது.

இவ்வியத்தகு மாற்றத்தினைத் தூண்டும் அடிப்படைக் காரணிகள் மிக சிக்கலானவை என்பதோடு, பன்முகத்தன்மை கொண்டவையுமாகும். இந்த சிக்கலினைத் தீர்க்க, வறுமைக் குறைப்புக்கு பங்களித்த கொள்கைகள் மற்றும் செயல்முறைகளைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை CEPA இனங்கண்டுள்ளது. முன்னேற்றங்கள், அபிவிருத்திகள் என்பன தலைகீழாக மாறுவதற்கு காரணம் என்ன என்பதனைக் கண்டறிந்துள்ளது. இப்புரிதலானது எதிர்காலத்தில் வறுமையை சமாளிக்க பயனுள்ள வெற்றிகாண் செயல்திட்டங்களை வகுப்பதில் முக்கிய பங்காற்றும்.

இவ்வாய்வுக் கருத்தரங்கானது ஒன்றுடன் ஒன்று பூர்த்தி செய்யும் இரு கூறுகளைக் கொண்ட ஒரு அணுகுமுறையைப் பின்பற்றும் வகையில் "பின்னோக்கிய மீளாய்வு" மற்றும் "எதிர்கால அபிவிருத்தியை நோக்கியவை" எனும் தொனிப்பொருளில் எமது புரிதலை விரிவுபடுத்துவதோடு காலப்போக்கில் வறுமை தொடர்பான பிரச்சனைகளை மதிப்பாய்வு செய்து அவை தொடர்பான அளவீடுகளில் கவனம் செலுத்தி தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் அதற்கு அப்பாலும் சென்று வறுமை நிலையினை நிவர்த்தி செய்தலுமாகும்.

இந்நிகழ்வில் முக்கிய உரைகளை முன்னாள் மத்திய வங்கி ஆளுநரான கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பிராந்தியங்கள் தொடர்பான பொருளாதார நிபுணரான கலாநிதி ராணா ஹசன் ஆகியோர் ஆற்றியிருந்தனர். இவ்வாய்வுக் கருத்தரங்கின் முக்கிய விளைவாக எதிர்கால வறுமைக் குறைப்பு மற்றும் கடந்த கால வெற்றிகரமான அணுகுமுறைகளில் மிகப் பொருத்தமானவற்றை மதிப்பீடு செய்யப்பட்டமை அமைந்திருந்தது.

நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் வறுமையை நிவர்த்தி செய்வது என்பது தனித்துவமான பல சவால்களை முன்வைக்கின்றது. பெரும் பொருளாதாரம் தொடர்பான சவால்கள், வறுமை மற்றும் சமத்துவமின்மை மீதான அவற்றின் விளைவுகள் பற்றிய தொடர்ச்சியான காலத்துக்கு ஏற்ற புத்தம் புது பேச்சு மேடை தளம் என்பன பற்றி இவ் ஆய்வுக் கருத்தரங்கில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. நிலையான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உறுதிப்படுத்தல் திட்டங்கள் மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் என்பனவற்றை எடுத்துக்காட்டுவது இதன் சிறப்பம்சமாகும். பொருளாதார நிலைப்படுத்தலானது முக்கியமானதென்ற போதிலும், அது மட்டுமே போதுமானதாகாது. வறுமையைக் குறைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் பொருளாதார வளர்ச்சி, முக்கிய பங்கு வகிக்கின்றது. பொருளாதார சீர்திருத்தங்கள், உறுதிப்படுத்தல் கொள்கைகளுக்கு அப்பால், ஏழைகளை நியாயமற்ற விதத்தில் பாதிக்கக் கூடும் என்பதும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனவே, இப்பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள பல துணைக் கொள்கைகளும் அவசியமாகும்.

### Techno Sri Lanka 2023 இல் SLT-MOBITEL

# 5G தொழில்நுட்பம் பரீட்சார்த்தம்

SLT-MOBITEL, நவீன ஹைபிரிட் மாதிரி (SA+NSA) 5G தொழில்நுட்பத்தை இலங்கையில் முதன்முறையாக பரீட்சித்திருந்தது. அண்மையில் நடைபெற்ற Techno 2023 கண்காட்சியில் இந்த பரீட்சார்த்த நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது.

இந்த தொழில்நுட்ப முன்னேற்றத்தினூடாக, 5G இன் பரந்தளவு அப்ளிகேஷன் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்திருந்ததுடன், வாடிக்கையாளர்களுக்கு 5G இன் முழுமையான அனுபவத்தை பெற்றுக் கொள்வதற்கு ஒப்பற்ற வாய்ப்பையும் வழங்கியிருந்தது. 5G பிரயோகத்துடன், Ultra-Reliable Low Latency Communication (URLLC) ஐ பயன்படுத்தி முக்கியமான அப்ளிகேஷன்களை செயற்படுத்த SLT-MOBITEL எதிர்பார்த்துள்ளதுடன், மேம்படுத்தப்பட்ட latency உடன், உயர்ந்த வாடிக்கையாளர் கேள்விகளை நிவர்த்தி செய்யவும், Network Slicing ஐ ஈடுகொடுக்கவும், உயர்ந்த சேவைத் தர உறுதிப்பாடு (QoS), Edge கணனியல் மற்றும் பல இதர நவீன செயற்பாட்டு வசதிகளை வழங்கும்.


நவீன 5G (SA+NSA) ஹைபிரிட் வலையமைப்பின் அறிமுகத்தினூடாக, வணிக நோக்கத்துக்காக 5G வலையமைப்பு அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர், 4G இலிருந்து 5Gக்கு மாறுவதற்கான கட்டமைப்பு தயார்நிலை உறுதி செய்யப்பட்டிருந்தது.



5G தொழில்நுட்பத்தின் பரந்தளவு ஆற்றல்களை அனுபவிப்பதற்கான வாய்ப்பை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் வகையில், SLT-MOBITEL தொடர்ந்தும் தனது முன்-வணிக 5G பரீட்சார்த்த வலயங்களை பிரதான நகரங்களில் விஸ்தரித்த வண்ணமுள்ளது. இதில் கொழும்பு, கண்டி, அனுராதபுரம், காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகியன அடங்கியுள்ளன. இதனூடாக, எதிர்காலத்தில் 5G சேவைகள் அதிகளவு சகாயத்தன்மை மற்றும் அணுகக்கூடிய தன்மையை கொண்டிருப்பதற்கு வழியமைக்கின்றது.

ரஷ்யா

# “8 பிள்ளைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்”



உக்ரேனுடன் நடந்து வரும் போரில், பிறப்பு வீதம் குறைந்து வருவதால், ரஷ்ய பெண்கள் எட்டு குழந்தைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வலியுறுத்தியுள்ளார்.

மாஸ்கோவில் நடைபெற்ற உலக ரஷ்ய மக்கள் பேரவையில் காணொளி இணைப்பு மூலம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், “நம் முன்னோர்கள் நான்கு, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை பெற்றுக்கொண்டு வலுவான தலைமுறையைச் சேர்ந்த குடும்பங்களை உருவாக்குவது என்பது பாரம்பரிய வழக்கமாக இருந்தது. எங்கள் பாட்டி வம்சத்தில் ஏழு, எட்டு அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தையை பெற்று வளர்த்துள்ளனர். இந்த மரபை நினைவில் கொண்டு இன்றைய இளம் தலைமுறை பெண்களும் 8 அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை பெற்று குறைந்து வரும் ரஷ்ய மக்கள் தொகையை அதிகரிக்க தங்களது பங்களிப்பினை வழங்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.

கடந்த 1999ஆம் ஆண்டு முதலே ரஷ்யாவின் மக்கள் தொகை குறைந்து வருகின்றது.

மேலும், உக்ரைன் போரில் 3 இலட்சம் ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், மக்கள் தொகையை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ரஷ்ய ஜனாதிபதி இவ்வாறு பேசியுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் ரிவித்துள்ளது.

பலஸ்தீன்

## காசாவில் குண்டு மழை; 240 பேர் பலி

இஸ்ரேல்-ஹமாஸுக்கு இடையிலான போர் நிறுத்த காலம் நிறைவடைந்த நிலையில், காசா முனையில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளது.

மேலும், போர் விமானங்கள் மூலம் காசா முனையில் உள்ள ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. அதேபோல், இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் ரொக்கெட் தாக்குதலை நடத்துகின்றனர்.

இந்நிலையில், போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 240 பேர் பலியாகியுள்ளதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.





வியட்நாம்

## வியக்க வைத்த மூளை

வியட்நாம் நாட்டை சேர்ந்த நபரொருக்கு அடிக்கடி தலைவலி ஏற்பட்டுள்ளது. அத்துடன், அவருக்கு நாசியிலிருந்து நீர் வடிதல் பிரச்சினையும் இருந்து வந்ததுள்ளது. இதையடுத்து, அந்நாட்டின் வடமத்திய கடற்கரை பகுதியின் டாங் ஹாய் (Dong Hoi) நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்றுள்ளார். அங்கு அவரை பரிசோதித்தபோது அவருக்கு டென்ஷன் நியூமோசெபாலஸ் (tension pneumocephalus) எனும் அரிய நோய் இருப்பது தெரிய வந்துள்ளது. இது மூளையில் உள்ள அழுத்தத்தை அதிகரிக்கும் ஓர் அபாய நிலை ஆகும்.

இதற்கான காரணம் என்னவென்று மேலும் பரிசோதித்தபோது மருத்துவர்களே வியக்கும் வண்ணம், அந்த நோயாளியின் நாசி வழியாக சென்று மூளைக்குள் இரண்டு சாப்ஸ்டிக்ஸ் குச்சிகள் பதிந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதை மருத்துவர்கள் எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சை மூலம் அகற்றி வெற்றிகரமாக வெளியே எடுத்துள்ளனர்.

உத்தரப் பிரதேசம் ஜனவரி 22ஆம் திகதி

## ராமர் கோயில் கும்பாபிஷேகம்



உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள அயோத்தியில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள ராமர் கோயில் கும்பாபிஷேகம் வருகிற ஜனவரி மாதம் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக விழாவை இந்தியா முழுவதும் வெகு விமரிசையாக கொண்டாட பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அயோத்தி விமான நிலையமும் தயார் நிலையில் உள்ளது. அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக, உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், நகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் முதல் கட்டம் டிசெம்பர் 15ஆம் திகதிக்குள் தயாராகிவிடும் என்று அறிவித்துள்ளார்.

இந்த விமான நிலையம் மர்யதா புருஷோத்தம் ஸ்ரீ ராம் சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கப்படும் என்றும் விமான நிலையத்தில் போயிங் 737, ஏர்பஸ் 319 மற்றும் ஏர்பஸ் 320 விமானங்கள் பயன்பாட்டில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா

## திமிங்கல எச்சம் கடத்திய 3 பேர் கைது

திமிங்கலத்தின் வயிற்று பகுதியில் உருவாகும் பழுப்பு நிற மெழுகு பொருள் திமிங்கல எச்சம் (அம்பர்கிரிஸ்) என்று அழைக்கப்படுகிறது.


விலையுயர்ந்த வாசனை திரவியங்கள் தயாரிக்க அம்பர்கிரிஸ் பயன்படுத்தப்படுகிறது.

சர்வதேச சந்தையில் திமிங்கல எச்சத்திற்கு அதிக விலை கிடைக்கிறது. வன விலங்குகள் பாதுகாப்பு சட்டத்தின்படி திமிங்கல எச்சம் வைத்திருப்பது மற்றும் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டு உள்ளது. இதனால் பலர் திமிங்கல எச்சத்தை கடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் திருச்சூர் நகர பகுதியில் பொலிஸார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அந்த வழியாக வந்த ஒரு காரை சோதனை செய்துள்ளனர். அதில் 3 பேர் 5 கிலோ கிராம் எடையுள்ள திமிங்கல எச்சத்தை காரில் கடத்தி சென்று அதனை கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு விற்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.



## புதிய அப்டேட்டை அறிவித்த இஸ்ரோ



சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா-எல்1 என்ற விண்கலத்தை இஸ்ரோ கடந்த செப்டம்பர் 2ஆம் திகதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலமானது 125 நாட்கள் பயணம் செய்து 15 இலட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ‘லெக்ராஞ்சியன்’ புள்ளி-1ஐ சென்றடையும். அங்கிருந்து சூரியனை ஆய்வு செய்யும் பணியில் விண்கலம் ஈடுபடும் என இஸ்ரோ தெரிவித்தது.

இந்நிலையில், ஆதித்யா-எல்1 விண்கலத்தில் உள்ள சோலார் ஸ்பெக்ட்ரோ மீட்டர் என்ற கருவி சனிக்கிழமை (02) முதல் செயல்படத் தொடங்கியுள்ளது என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

மேலும்,ஆதித்யா சூரிய காற்று துகள் கருவியில் புரோட்டான், ஆல்பா துகள்களில் உள்ள எண்ணிக்கை மாறுபாடு கண்டறியப்பட்டுள்ளதாகவும் 2 நாட்களில் SWIS ஆல் கைப்பற்றப்பட்ட புரோட்டான் மற்றும் ஆல்பா துகள் எண்ணிக்கையில் உள்ள ஆற்றல் மாறுபாடுகளை ஹிஸ்டோகிராம் விளக்குகிறது எனவும் தெரிவித்துள்ளது.

# நியூகாசிலிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அந்த அணி உடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

நியூகாசில் சார்பாகப் பெறப்பட்ட கோலை அந்தோனி கோர்டன் பெற்றிருந்தார்.



## வவுனியாவில் பளுதூக்கல் சாதனையாளர்கள் கௌரவிப்பு

க.அகரன்



பளுதூக்கல் போட்டியிலே சாதனை படைத்த மாணவர்களினை கௌரவிக்கும் நிகழ்வு பெரியகோமரசன்குளம் மகாவித்தியாலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது வடமாகாண மற்றும் தேசிய ரீதியில் பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றி சாதனை செய்த பாடசாலை மாணவிகளிற்கு பதக்கம் அணிவித்து பரிசில்களும் வழங்கப்பட்டதுடன், பயிற்றுவிப்பாளர் ஞா.ஜீவன் மற்றும் பொறுப்பாசிரியர் அம்பிகா ஆகியோருக்கான கௌரவிப்பும் இடம்பெற்றிருந்தது.

## ஈஸ்டர்ன் யூத் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள்

நூருல் ஹுதா உமர்

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் “மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்” எனும் செயற்திட்டத்தின் கீழ் அல் ஹாஜ் கலீல் முஸ்தபாவால் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வானது மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல்.முக்தாரால் முன்னெடுக்கப்படுகிறது.



அந்தவகையில், மருதமுனையில் காணப்படுகின்ற சுமார் 33 இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கும் வருடாந்தம் உதவிகளை தொடர்ந்து வழங்கும் செயற்திட்த்தின் கீழ் இதுவரைக்கும் 11 கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



மூதூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள

## விளையாட்டுக் கழகங்களுடனான கலந்துரையாடல்

எப்.முபாரக்

மூதூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுடனான விசேட கலந்துரையாடல் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக்கின் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மூதூர் பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட 44 விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன், விளையாட்டுக் கழகங்களின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் தன்னார்வ செயற்பாடுகள் தொடர்பாகவும் கழந்துரையாடப்பட்டது.

மேலும், 15 பேர் கொண்ட பிரதேச விளையாட்டு குழவும் அமைக்கப்பட்டது. அத்துடன், கலந்து கொண்ட கழகங்களால் பின்வரும் தீர்மானம்களும் எடுக்கப்பட்டன.

விளையாட்டுத் துறையை முன்னேற்றும் பொருட்டு சிறந்த வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கான பயிற்சி முகாம்களை நடத்தல். சிறந்த விளையாட்டு வீரர்களை கௌரவித்தல். அனர்த்த காலங்களில் பிரதேச செயலகத்தோடு இனைந்து தொண்டுபணிகளில் ஈடுபடல். டெங்கு ஒழிப்பு மற்றும் சிரமதானங்களில் பங்குபற்றல்.

## ‘மப்பேயில் மட்டும் பரிஸ் ஸா ஜேர்மைன் தங்கியிருக்கவில்லை’

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜேர்மைனின் முன்கள வீரரான கிலியான் மப்பேயில் மட்டும் கோல்களுக்காகத் தங்கியிருக்கவில்லை என அக்கழகத்தின் முகாமையாளர் லூயிஸ் என்றிக்கே நேற்று முன்தினம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

லீக் 1 தொடரில் இப்பருவகாலத்தில் 12 போட்டிகளில் 14 கோல்களைப் பெற்றதோடு, ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் மூன்று கோல்களைப் பெற்றுள்ளார். மப்பேக்கு அடுத்ததாக அனைத்துப் போட்டிகளிலும் சேர்த்து பரிஸ் ஸா ஜேர்மைனில் பின்களவீரரான அஷ்ரஃப் ஹக்கிமி, முன்களவீரரான ரன்டல் கோலோ முலானி ஆகியோர் தலா நான்கு கோல்களைப் பெற்றுள்ளனர்.

கடந்த பருவகாலத்தில் லியனல் மெஸ்ஸி 21 கோல்களைப் பெற்றதோடு, நெய்மர் 18 கோல்களைப் பெற்றிருந்த நிலையில் கழகத்தை விட்டு வெளியேறியிருந்தனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 04 , டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.